முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்,

**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 13 ஆம் நாள் திங்கள்கிழமை

**இடைநிலை மனு எண்.03/2025**

**IN**

**அசல் வழக்கு எண்.37/2018**

1. பிச்சையா ... 1ம் மனுதாரர்/1ம் வாதி
2. முருகன் (இறப்பு) ... 2ம் வாதி
3. மெய்யப்பன்
4. இராஜகுரு
5. கருப்பசாமி
6. ராமலட்சுமி ... 3 முதல் 6 மனுதாரர்கள்/ 3 முதல் 6 வாதிகள்
7. வெள்ளையம்மாள் (இறப்பு) ...7ம் வாதி
8. வைரலட்சுமி
9. காளீஸ்வரி
10. முத்துலட்சுமி ... உத்தேச 8 முதல் 10 மனுதாரர்கள்/ உத்தேச 8 முதல் 10 வாதிகள்

/எதிர்/

வேல்முருகன் ... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனுவானது 24.09.2025 தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.சண்முகையா அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.S.S.பிரதாப்ராஜ் அவர்கள் ஆஜராகியும், மனு, எதிருரை மற்றும் அசல் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இருதரப்பு வாத உரையை கேட்டறிந்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.10.13 17:19:49 +0530

## உத்தரவு

இம்மனுவானது, மனுதாரர்கள் தரப்பில் உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 22 விதி 3 மற்றும் பிரிவு 151–ன்படி, இவ்வழக்கில் இறந்துபோன 2ம் வாதிக்கு 8 முதல் 10 மனுதாரர்களை வாரிசுகளாகவும் முறையே உத்தேச 8 முதல் 10 வாதிகளாகவும் கட்சி சேர்த்துக் கொண்டு மேற்படி இவ்வழக்கை மேல்நடத்திக் கொள்ள அனுமதியளித்து உத்தரவிடவேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1) **<u>மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்</u> :–**

இவ்வழக்கை மனுதாரர்கள் எதிர்மனுதாரர் மீது தபசில் சொத்துக்கள் மனுதாரர்களுக்கு தனித்துப் பாத்தியப்பட்டது என விளம்புகை பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி வழக்கு நிலுவையில் இருக்கும் காலத்தில் 2ம் வாதியான முருகன் என்பவர் 12.04.2025 அன்று காலமாகிவிட்டார் என்றும், மேற்படி காலம்சென்ற 2ம் வாதியான முருகன் என்பவர் கடந்த 12.04.2025 அன்று உத்தேச 8 முதல் 10 மனுதாரர்கள்/8 முதல் 10 உத்தேச வாதிகளை மட்டும் தனது அடுத்த வாரிசுகளாக விட்டுவிட்டு காலமாகிவிட்டார் என்றும், மேற்படி இறந்துபோன 2ம் வாதியின் எஸ்டேட்டுகளை மேற்படியாரின் சட்டப்படியான வாரிசுகள் நிலமையில் உத்தேச 8 முதல் 10 மனுதாரர்களே அடைந்து அனுபவித்து வருகின்றார்கள் என்றும், எனவே மேற்படி வழக்கில் இறந்துபோன 2ம் வாதிக்கு 8 முதல் 10 மனுதாரர்களை வாரிசுகளாகவும் முறையே உத்தேச 8 முதல் 10 வாதிகளாகவும் கட்சி சேர்த்துக் கொண்டு மேற்படி இவ்வழக்கை மேல்நடத்திக் கொள்ள உத்தரவிடவேண்டியது அவசியமாய் இருக்கிறது என்றும், இல்லாவிடில் மனுதாரர்களுக்கு மிகுந்த கஷ்ட, நஷ்டம் ஏற்படக்கூடும் என்றும், ஆகையால், இவ்வழக்கில் இறந்துபோன 2ம் வாதிக்கு 8 முதல் 10 மனுதாரர்களை வாரிசுகளாகவும் முறையே உத்தேச 8 முதல் 10 வாதிகளாகவும் கட்சி சேர்த்துக் கொண்டு மேற்படி இவ்வழக்கை மேல்நடத்திக் கொள்ள அனுமதியளித்து உத்தரவிடவேண்டி இம்மனு மனுதாரர்கள் தரப்பில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2025.10.13 17:19:58 +0530

2) <u>எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்</u>:–

மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றும், இவ்வழக்கில் இறந்துபோன 2ம் வாதி முருகன் என்பவருக்கு வாரிசுகளாக 8 முதல் 10 மனுதாரர்களை கட்சி சேர்த்து கொள்ளக்கோரியுள்ளதற்கு, மேற்படி இறந்துபோன 2ம் வாதியின் இறப்பு சான்றும், வாரிசு சான்றும் மனுவுடன் மனுதாரர்கள் தாக்கல் செய்யவில்லை என்றும், எனவே, இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் என எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) <u>தீர்வுக்குரிய பிரச்சனை:-</u>

இம்மனுவானது அனுமதிக்கப்படத்தக்கதா? என்பதேயாகும்.

4) மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு, எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரை, அசல் வழக்கு கோப்பு மற்றும் இருதரப்பு வாதஉரைகள் ஆகியவைகள் பரிசீலனை செய்யப்பட்டன.

5) மனுதாரர்களால் இம்மனுவானது இவ்வழக்கில் இறந்துபோன 2ம் வாதிக்கு 8 முதல் 10 மனுதாரர்களை வாரிசுகளாகவும் முறையே உத்தேச 8 முதல் 10 வாதிகளாகவும் கட்சி சேர்த்துக் கொண்டு மேற்படி இவ்வழக்கை மேல்நடத்திக் கொள்ள அனுமதியளித்து உத்தரவிடவேண்டி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) இம்மனுவின் மனுதாரர்கள் தரப்பில், இவ்வழக்கு நிலுவையில் இருக்கும் காலத்தில் 2ம் வாதியான முருகன் என்பவர் 12.04.2025 அன்று காலமாகிவிட்டார் என்றும், மேற்படி காலம்சென்ற 2ம் வாதியான முருகன் என்பவர் கடந்த 12.04.2025 அன்று உத்தேச 8 முதல் 10 மனுதாரர்கள்/8 முதல் 10 உத்தேச வாதிகளை மட்டும் தனது அடுத்த வாரிசுகளாக விட்டுவிட்டு காலமாகிவிட்டார் என்றும், மேற்படி இறந்துபோன 2ம் வாதியின் எஸ்டேட்டுகளை மேற்படியாரின் சட்டப்படியான வாரிசுகள் நிலமையில் உத்தேச 8 முதல் 10 மனுதாரர்களே அடைந்து அனுபவித்து வருகின்றார்கள் என்றும், எனவே மேற்படி வழக்கில் இறந்துபோன 2ம் வாதிக்கு 8 முதல் 10

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.10.13 17:20:05 +0530

மனுதாரர்களை வாரிசுகளாகவும் முறையே உத்தேச 8 முதல் 10 வாதிகளாகவும் கட்சி சேர்த்துக் கொண்டு மேற்படி இவ்வழக்கை மேல்நடத்திக் கொள்ள உத்தரவிடவேண்டியது அவசியமாய் இருக்கிறது என்றும் காரணம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

7) இம்மனுவின் எதிர்மனுதாரர் தரப்பில் 2வது வாதியான "முருகன்" என்பவர் கடந்த 12.04.2025ம் தேதியில் காலமாகிவிட்டார் என்பதையும், இறந்துபோன 2ம் வாதிக்கு வாரிசுகளான 8 முதல் 10 மனுதாரர்கள் என்பதையும் மறுக்கவில்லை.

8) மேலும், காலம்சென்ற 2ம் வாதியின் வாரிசுகளான 8 முதல் 10 மனுதாரர்களை அசல் வழக்கில் உத்தேச 8 முதல் 10 வாதிகளாக வாரிசு அடிப்படையில் கட்சி சேர்ப்பதால் எதிர்மனுதாரருக்கு எவ்வித கஷ்ட, நஷ்டம் ஏற்படப்போவதில்லை.

9) எனவே, மேற்கண்ட பரிசீலனையில் இருந்து, இம்மனுவானது நீதியின் நலன் கருதி அனுமதிக்கப்பட்டு இம்மனுவிற்கு இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்படுகிறது.

10) **<u>இறுதியாக:–</u>**

இம்மனுவானது அனுமதிக்கப்படுகிறது. தரப்பினர்கள் தங்களது செலவுத்தொகையை தாங்களே ஏற்றுக்கொள்ளவேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 13ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.10.13 17:20:13 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**<u>இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் </u>:–** இல்லை –

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.10.13 17:20:19 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சங்கரன்கோவில்.**

**மு.மா.உ. நீதிமன்றம்,**
**சங்கரன்கோவில்,**

I.A.No.03/2025
in
O.S.No.37/2018
**உத்தரவு (Draft / Fair)**

**நாள் : 13.10.2025**